# இணைப்பாட நடவடிக்கைகளும் அவற்றின் பயன்களும்

மனிதனுக்கு ஏட்டுக்கல்வி மட்டும் போதாது. அனுபவக் கல்வியும் பல துறை அறிவும் தேவை. இதை மாணவர்கள் பெறுவதற்காக இணைப்பாட நடவடிக்கைகளில் ஈடுபட ஊக்குவிக்கப்படுகின்றனர். இணைப்பாட நடவடிக்கைகள் வெறும் புத்தகப் பூச்சிகளாக மாணவர்கள் உருவாவதைத் தடுக்கவும் உதவுகின்றன. இணைப்பாட நடவடிக்கைகளைப் பற்றியும் அவற்றின் நன்மைகளைப் பற்றியும் இக்கட்டுரையில் காண்போம்.

மாணவர்களின் கல்வி அவர்களின் முழுவளர்ச்சிக்குப் பயன்பட வேண்டும்; அவர்களை நடைமுறை வாழ்க்கைக்குத் தயார்ப்படுத்த வேண்டும். உயர்கல்வி பெற வாய்ப்பில்லாத ஒரு மாணவனுக்கு, மற்றத் திறன்கள் உதவவேண்டும். உதாரணமாக ஒரு மாணவன் கலைத்துறை, விளையாட்டுத்துறை ஆகியவற்றில் தன் திறமைகளை வளர்த்துக் கொண்டால், அத்திறன்கள் அவனுக்குப் பல வழிகளில் கைகொடுக்கும். அவன் வேலை வாய்ப்பைப் பெறவோ, உயர்கல்வியைப் பெறவோ இத்திறமைகள் உதவும். விளையாட்டுகள் போன்ற இணைப்பாட நடவடிக்கைகள் அவன் உடல் வலிமைபெற உதவுகின்றன.

மாணவர்கள் சிலர் இசை, நாடகம், நடனம் போன்ற துறைகளில் ஈடுபாடு கொள்வர். வேறு சிலருக்கோ விளையாட்டுகளில் அதிக விருப்பம் இருக்கும். வேறு சிலர் சீருடைக் குழுக்கள், செஞ்சிலுவைச் சங்கம் போன்றவற்றில் ஓர் உறுப்பினராகி, சேவை செய்ய விரும்புவர். இது போன்ற நடவடிக்கைகள் மாணவர்களை வெளியுலகத்தோடு தொடர்பு கொள்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக அமைகின்றன. மாணவர்களில் சிலர் பள்ளிக்கு ஒழுங்காக வருவதில்லை. படிப்பில் நாட்டம் காட்டுவதில்லை. இப்படி ஒழுங்கில்லாத மாணவர்கள் ஒரு சிலரைப் பள்ளிக்கு வரச் செய்வதற்கு இணைப்பாட நடவடிக்கைகள் உதவுகின்றன. இந்நடவடிக்கைககளின் மீதுள்ள ஆர்வத்தால் இம்மாணவர்கள் பள்ளிக்கு ஒழுங்காக வருகின்றனர்.

மாணவர்களிடையே பேச்சுத்திறமை, எழுத்துத்திறமை, இசைத்திறமை போன்ற திறமைகளை வளர்ப்பதில் இணைப்பாட நடவடிக்கைகள் மிகச் சிறந்த பங்காற்றுகின்றன. காலத்தின் அருமையைக் கருத்தில் கொண்டு, படிப்பில் கவனம் செலுத்தி இணைப்பாட நடவடிக்கைகளில் ஈடுபடுவதே வரவேற்கத்தக்கது. இதனை நம் மாணவர்கள் நன்கு உணர்ந்து நடக்க வேண்டும்.

நாளைய சிங்கப்பூருக்குத் திறமையும், புத்திசாலித்தனமும் பலதுறை அறிவும் வாய்ந்த தலைவர்கள் தேவை. அத்தகைய எதிர்காலத் தலைவர்களை இனங்கண்டு கொள்ள இணைப்பாட நடவடிக்கைகள் உதவுகின்றன என்பதை யாரும் மறக்க முடியாது.

**கு. பிரியலதா**
**உயர்நிலை 2 உயர்தமிழ்**